**வடக்கு வீதி புனரமைப்புச் செயற்திட்டம் (புத்தளம் - மறிச்சுக்கட்டி-மன்னார் வீதியின் புனரமைப்பு) 2014**

---

வடக்கு வீதி புனரமைப்புச் செயற்திட்டத்தின் (புத்தளம்- மறிச்சுக்கட்டி -மன்னார் வீதியின் புனரமைப்பு) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய பீஎல்ஏ-201112 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் நிறைவேற்றல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது தேசிய மட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை முகாமைசெய்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பாக உள்ளது. புத்தளம்- மறிச்சுக்கட்டி -மன்னார் வீதியின் 113 கிலோமீற்றர்கள் நீள வீதியை புனரமைப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ஐ.அ.டொலர் 86.11 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 73.21 மில்லியன் அல்லது 85 சதவீதம் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைகள் 2012 ஓகஸ்ட் 24 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2015 பெப்ரவரி 23 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன்

நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. **நிதிக்கூற்றுக்கள்**

2.1. **அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **கணக்கீட்டுக் குறைபாடு**

ஆலோசனை மற்றும் சிவில் வேலைகள் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட நிதியத்தில் ஒப்பந்தக்காரர் மற்றும் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள், உபகரணங்கள் தளபாடங்கள் போன்ற சொத்துக்கள் செயற்திட்டத்தின் சொத்துக்களாக கருதப்படவேண்டுமென வேண்டப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஆலோசனையாளர்களால் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற சொத்துக்களின் பெறுமதிகளை தனியாக அடையாளங்காணப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக பூர்த்திசெய்யப்பட்ட சிவில் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

2.2.2 **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக மேந்தலைக் கட்டணங்களாக ரூபா 667,299 தொகை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டியின் 5.4.4 ஆம் பிரிவுக்கு முரணாக ஏற்பாட்டு தொகை மற்றும் நிச்சயமின்மைகளை உள்ளடக்கியிருந்த மொத்த ஒப்பந்த பெறுமதியின் 30 சதவீதமான ரூபா 988.7 மில்லியன் தொகையான முற்பணங்களின் கொடுப்பனவு உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதும் 2014 திசெம்பர் 31 வரையும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|
| | | | 2014 ஆம் ஆண்டின் போது | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 73.21 | 9,887.50 | 3,278.8 | 41.55 | 5,427.84 |
| இலங்கை அரசாங்கம் | 12.90 | 1,808.12 | 64.6 | 12.49 | 1,675.33 |
| | 86.11 | 11,695.62 | 3,343.4 | 54.04 | 7,103.17 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வேலையின் மூல நோக்கெல்லையின் கீழ் மேற்கொள்ள வேண்டிய புத்தளம் - மறிச்சுக்கட்டி–மன்னார் வீதியின் 113 கிலோமீற்றர்களின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகளில் வில்பத்து சரணாலயத்துக்கு குறுக்காக செல்கின்ற எழுவாங்குளத்திலிருந்து மறிச்சுக்கட்டி வரையிலான வீதிப்பிரிவின் 36 கிலோமிற்றர்களின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகள் வெளித்தரப்பினால் தொடரப்பட்ட அடிப்படை உரிமை வழக்கினால் தொடர்ச்சியாக இல்லாதொழிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 31.8 சதவீதமான வேலைகளின் மூல நோக்கெல்லை இல்லாதொழிக்கப்பட்டிருந்த போதிலும் வேலைக்குறைவு மற்றும் மேலதிகமாக செலுத்தப்பட்ட ஆரம்ப முற்பணங்களை கணிப்பிடுதல் மற்றும் அறவிடுதல் அடிப்படையில் மற்றும் மதிப்பிடப்பட்ட மூலக் கிரய அடிப்படையில் ஒப்பந்தத்தின் உத்தேசித்த பூர்த்தியாக்கல் திகதியை மீளாய்வு செய்வதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்பார்வை ஆலோசனை சேவைக்கான வேலைகளின் விரிவாக்கம் மீளாய்வு செய்யப்பட்ட வேலைகளின் நோக்கெல்லை மற்றும் கால அடிப்படையில் மீள கருத்திற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க ஆலோசனை சேவைகளுக்கான கட்டணங்களும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) அடிப்படை உரிமை வழக்கின் கீழ் உயர் நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் 2015 பெப்ரவரி 13 ஆம் திகதிய வதிவிட பொறியியலாளரின் கடிதத்தினால் வில்பத்து சரணாலயத்துக்கு உள்ளேயுள்ள வீதிகளின் சாதாரண பராமரிப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டும் வீதிகளை நல்ல நிலைமையில் பேணுவதற்கு 33/7 மற்றும் 34/1 இன் பாலங்களை திருத்தியமைப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தக்காரரால் பாலங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆகஸ்ட் 12 ஆம் திகதிய சி3/39சி/00271 ஆம் இலக்க வதிவிட பொறியியலாளரின் கடிதத்தின் பிரகாரம் வீதியின் நிலக்கீழ் கொங்கிறீற் நடைபாதையின் புனரமைக்கப்பட்ட பிரிவுகளின் 25 இடங்களிலுள்ள வெடிப்புக்கள் விசாரணை செய்யப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தக்காரர்களால் மேற்கொள்ளப்பட்ட வெடிப்புக்களின் திருத்தங்களை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் எவையும் கிடைத்திருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் செயற்திட்டமானது அனுமதியற்ற முறையில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை இடித்தகற்றுவதற்கு பதிலாக சிலாவத்துறை சந்தியிலுள்ள நடைபாதையின் அகலத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

(ஆ) பிணக்கு தீர்ப்பளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், தீர்ப்பளித்தல் சபையின் உறுப்பினர்களின் செலவினங்களை பகிர்ந்துகொள்வதற்கு தொழில்தருநரும் ஒப்பந்தக்காரரும் இணைந்தும் தனித்தனியாகவும் பொறுப்புள்ளவர்களாவர். எனினும், தீர்ப்பளித்தல் சபை உறுப்பினர்களின் கட்டணங்கள் தொடர்பாக ஏற்பட்ட ரூபா 3.01 மில்லியன் தொகை செயற்திட்டத்தில் அறவிடப்பட்டிருந்தது. மேலும், பிணக்கு தீர்ப்பளித்தல் சபை உடன்படிக்கை பின்னர் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டமானது ஒப்பந்தக்காரர்களின் உடன்படிக்கையுடன் பிணக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

### 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

மன்னாரில் உள்ள வங்காலையின் சென் அனிஸ் மத்திய கல்லூரியின் நுழைவு வீதிகளின் நிர்மாண வேலைகள் செயற்திட்டத்தால் ரூபா 7.44 மில்லியன் கிரயத்தில் பிரதான வேலைகளின் முரணாக பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலும், நாவற்குழி–காரைதீவு–மன்னார் வீதிப் பிரிவின் 3.9 கிலோமிற்றர் புனரமைப்பும் செயற்திட்டத்தால் 681.60 மில்லியன் கிரயத்தில் முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் மீது மேற்கொள்ளப்பட்ட கிரய மதிப்பீடுகள் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.